## தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(29-06-2016 – 03-07-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 28-06-2016

### கடந்த கால வானிலை 24-06-2016 முதல் 27-06-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 3.3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 34-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25-27 |
| மேக மூட்டம் | 5-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 41-66 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 13-17 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை 03-07-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 29.06.16 | 30.06.16 | 01.07.16 | 02.07.16 | 03.07.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 4 | 3 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 19 | 19 | 19 | 19 | 19 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 60 | 60 | 60 | 60 | 60 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 12 | 12 | 12 | 12 | 12 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### குறுஞ்செய்தி

- அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**பயிர்: நெல், கரும்பு**

**பருவம்: நெல்: நாற்றங்கால் தயார்செய்தால்**

- நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியரமாக 200 கிலோ ஜிப்சம் இடவேண்டும். மேலும் மணிச்சத்திற்கு 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்து மிகவும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு 35 கிலோ யூரியா இடவேண்டும்.
- 150 நாட்கள் வயதுடைய கரும்புக்கு தோகை உரிப்பதன் மூலம் முன் பருவ நடப்பட்ட கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.
- நிலவும் குறைந்த வெப்பநிலையால் கால்நடைகள் குறைந்த அளவு தண்ணீர் உட்கொள்ளும். இதை அவ்வப்பொழுது கவனித்து போதுமான அளவு சுத்தமான தண்ணீர் கொடுக்கவும்.